
101

# ஆலயங்களும் அற்புதங்களும்

பாபநாசம் குறள்பித்தன்



# ஆலயங்களும் அற்புதங்களும்

தமிழக அரசின் விருது பெற்ற எழுத்தாளர்

**பாபநாசம் குறள்பித்தன்**

**பாலா புக்ஸ்**

G-4, பாலகிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ்,
8/97, பெரியார் பாதை,
சூளைமேடு, சென்னை - 600 094.
தொலைபேசி: 98841 28442

❑**AALAYANGALUM ARPUTHANGALUM** ❑ **PAPANASAM KURALPITHAN** ❑ First Edition 2006 ❑ Pages: 48 ❑ Published by: Bala Books, G-4, Balakrishna Apartments, 8/97, Periyar Pathai, Choolaimedu, Chennai-94 ❑Phone: 98841 28442 ❑ Typeset: Guhan Computers, Chennai-600 078 (94442 92899) ❑ Wrapper Designed by: Mathiraj, Chennai ❑ Printed at: CVSP Offset, Chennai-14.

**Rs.15.00**

❑ஆலயங்களும் அற்புதங்களும் ❑ பாபநாசம் குறள்பித்தன் ❑ முதல் பதிப்பு 2006 ❑ பக்கங்கள்: 48 ❑வெளியீடு: பாலா புக்ஸ், ஜி-4. பாலகிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ், 8/97, பெரியார் பாதை, சூளைமேடு, சென்னை-94 ❑தொலைபேசி: 98841 28442 ❑ ஒளி அச்சு: குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-600 078 (94442 92899)❑ அட்டைப்படம்: மதிராஜ், சென்னை ❑ அச்சிட்டோர்: CVSP ஆப்செட், சென்னை-14.

விலை: ரூ.15.00

# மனிதம் மலரும்...

*- பாபநாசம் குறள்பித்தன்*

ஆன்மிகம் என்பது ஆன்மா வைத் தேடுவதுதான்.

இறைவுணர்வு எங்கெல்லாம் தோன்றுகிறதோ, அங்கெல்லாம் அன்பு முளைவிடும்; அருள் பெருகும்; கருணை கண் விழிக்கும்; அறம் தழைக்கும்; பண்பு படரும்; மனிதம் மலரும்.

இந்த உண்மையை பலர் உணராததால் தான், இந்திய எல்லையில் இன்று பீரங்கிகள் முதலை களைப் போல வாய் பிளக்கின்றன; துப்பாக்கிகள் பாம்புகளைப்போல சீறுகின்றன. இந்துக்கள் கோமாதாவாய் வழிபடுகின்ற பசுவதையும் இங்கே நடக்கின்றன.

மதக் கலவரமும், இனக்கலவரமும் மலிந்து வருகின்றன.

இக்கொடுஞ்செயல்கள் குறைய வேண்டு மானால் இம்மண்ணில் இறையருள் பெருக வேண்டும்.

ஒவ்வொருவரும், மனிதப் பிறவியின் புனிதமே இறையருளில் தொய்வதே; தொடர்வதே; கலப்பதே என்பதை உணர்தல் வேண்டும்.

ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு கொள்கையும், கோட்பாடும்; வழிபடு முறைகளும், வழிபடு தெய்வங்களும் வேறு பட்டிருக்கும்; மாறுபட்டிருக்கும்.

இருந்தாலும்...

எல்லா மதமும் போதிப்பது அன்பை விதையுங்கள்; ஆசையை ஒழியுங்கள்; அறத்தை வளருங்கள்; உயிர்ப்பலியை நீக்குங்கள்; பாவத்தை தவிருங்கள்; மனிதத்தைப் போற்றுங்கள் என்பதைத் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்நூலிலே, இந்து, இஸ்லாம், கிறித்துவம் என்று மூன்று மதக் கடவுள்களைப் பற்றிய குறிப்புகளும் - செய்திகளும் திரட்டப்பட்டிருக்கின்றன.

சில இடங்களில், இறைவடிவங்களின் அற்புதக் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும், கதைகளையும் சேர்த்துள்ளேன்.

மொத்தத்தில் இந்நூல் ஆன்மாவைத் தேடும் புனிதப் பயணமே; பணியும்கூட. ஆன்மிக அன்பர்களுக்கு இது அருங்கனியே!

எப்போதும் போல் என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த்துணைவியார் நீலாகண்ணன் அவர்களுக்கு வணக்கமும், வாழ்த்தும்.

13/1, 2-வது குறுக்குச்சந்து,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
கைபேசி: 94444 54335

# பதிப்புரை

இந்தியாவில் ஆயிரக்கணக்கான கோயில்கள் உண்டு என்பதை நாம் அறிவோம்.

ஒவ்வொரு கோயில்களிலும் அங்கு எழுந்தருளி இருக்கும் கடவுள்கள் ஒரே மாதிரியாக இருப்பது இல்லை.

ஒவ்வொரு காலகட்டத்திலும், அவதாரங்கள் - நிலைப்பாடுகள் மாறி இருக்கின்றன.

அப்படியான, அற்புதமான நூற்றுக்கும் மேற்பட்ட தகவல்களை - செய்திகளை இந்நூலில் காணலாம்.

இந்து கடவுள்களை மட்டும் இந்நூலில் ஆசிரியர் திரு.பாபநாசம் குறள்பித்தர் எழுதவில்லை.

நபிகளைப் பற்றியும், ஏசுவைப் பற்றியும் அரிய செய்திகளையும் இந்நூலில் எழுதியுள்ளார்.

**பதிப்பாளர்.**



எங்கெல்லாம் தர்மமும், நீதியும்
மறைந்து அதர்மமும், அநீதியும்
தோன்றுகிறதோ அப்போது எல்லாம்
அங்கே இறையருள் தோன்றும்.
அப்படித் தோன்றிய வித்தியாசமான,
வியப்பான கடவுளர்களின் உருவங்களை -
காணக் கிடைக்காத காட்சிகளை
இங்கே தொகுத்திருக்கிறேன்...

# ஆலயங்களும் அற்புதங்களும்

சங்கரன்கோயில் என்ற ஊரில் விநாயகர், பாம்பை கையில் பிடித்தபடி இருந்து காட்சி தருகிறார்.

கோவை மாவட்டம், பவானி ஆதிகேசவ பெருமாள் கோயிலில் விநாயகர் வீணையை ஏந்திய நிலையில் காட்சி தருகிறார்.

தேவக்கோட்டைக்குச் சென்றால், காலில் சிலம் பணிந்த கணபதியைக் காணலாம்.

திருநாரையூரில் தொந்தி இல்லாத கணபதியைப் பார்க்கலாம்.

வேலூர் கோட்டை ஜலகண்டேசுவரர் கோயிலில் விநாயகர் குழந்தை வடிவில் இருக்கிறார்.

அம்பாசமுத்திரம் அருகே உள்ள கடையநல்லூர் என்ற ஊரில், வயிறு வெடித்த நிலையில் கணபதி காட்சியளிக்கிறார்.

நெருப்பு இல்லாமல் விளக்கு எரியுமா...? எரியும் என்கிறது இந்தச் சம்பவம்!

சங்கீத மும்மூர்த்திகளில் அதிக ஆற்றல் பெற்றவர் தியாகராஜர். இவர் இளைஞராக இருந்தபோது தம் குருவான வேங்கடரமணய்யாவுடன் புதுக்கோட்டை சென்றிருந்தார்.

அரண்மனை பணியாட்கள் சபையின் நடுவே ஒரு குத்துவிளக்கைக் கொண்டு வந்து வைத்து திரிகளைப் போட்டு எண்ணையையும் ஊற்றினார்கள்.

ஆனால், அவர்கள் விளக்கை மட்டும் ஏற்ற வில்லை. மன்னர் அரச சபையைப் பார்த்தார். இசை மேதைகள் பலர் அங்கே அமர்ந்திருந்தனர். இசை மேதை சொண்டி வேங்கடரமணய்யாவுடன் தியாகராஜரையும் கண்டார் மன்னர்.

அவரைப் பார்த்து மன்னர் சொன்னார், ''தங்களின் இசையின் ஆற்றலைப் பற்றி நாங்கள் மிகுதியாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். தங்களின் இசையின் வல்லமையால் விளக்கின் திரிகளில் தீ மூட்டி எரியச் செய்ய வேண்டும். அதை நாங்கள் கண்குளிர காண வேண்டும்'' என்றார்.

தியாகராஜர் தம் குருவைப் பார்த்தார்...

''சரி ஆகட்டும்...'' என தன் சீடனுக்கு அனுமதி வழங்கினார் குரு.

தியாகராஜர் மெல்ல ஆலாபனையை ஆரம்பித்தார். அவர் பாட எடுத்துக் கொண்டது 'ஜோதி ஸ்வரூபிணி' என்னும் இராகம்.

அங்கே இசை எல்லோர் இதயத்தையும் வசமாக்கிக் கொண்டு இருந்தது. இது மனிதக்குரலா...? தேவ கானமா...? என்று எல்லோரும் வியந்து ரசித்துக் கொண்டு இருந்தனர்.

தியாகராஜர் பாடினார்... பாடினார்... உயிர் உருகப் பாடினார்... ஜோதி ஸ்வரூபிணித்தாயே... எனக்காக இந்த தீபத்தை ஏற்றமாட்டாயா...? இறைவனிடம் வேண்டினார்.

என்ன வியப்பு...! குத்து விளக்கில் இருந்த திரிகள் தாமாகவே தீப்பற்றிக் கொண்டு சுவர் விட்டு பிரகாசித்தன...

மன்னர் அரியணையில் இருந்து வேகமாக இறங்கி வந்தார். தியாகராஜரை வணங்கினார்.

தியாகராஜர் மிகவும் அடக்கத்துடன், "அரசே! இதில் என் பெருமை எதுவும் கிடையாது. மனப்பூர்வமாக இறைவனிடம் இசை ரூபமாக விண்ணப்பித்துக் கொண்டேன். விளக்கு ஒளிவிட்டது. எல்லாம் இறையருள்தான்" என்றார்.

சயாமில் பெருச்சாளி வாகனத்துடன் விநாயகர் எழுந்தருளி இருக்கிறார்.

சீன - துர்க்கிஸ்தானில் விநாயகர் நான்கு கைகளுடன் பைஜாமா உடையில், முதுகில் திண்டுடன் விளங்குகிறார்.

சிதம்பரத்தில் கை ஒடிந்த நிலையில் கணபதி காட்சியளிக்கிறார்.

நெல்லை - புதூரில் கணபதி, யானை மீது அமர்ந்து காட்சி தருகிறார்.

கணபதி சிங்கத்தின் மீது ஏறி அமர்ந்து இருக்கும் கண்கொள்ளாக் காட்சியை திருவொற்றியூரிலும், நாகையிலும் காணலாம்.

ஆப்கானிஸ்தானில், 'கார்டெஸ்' என்னுமிடத்தில் நின்ற நிலையில், நான்கு கைகளுடனும், பாம்பை பூணூலாக அணிந்தும், கழுத்தில் ருத்திராட்சை மாலை தரித்தும், இடத்தந்தம் ஒடிந்தும் மிகப்பெரிய விநாயகர் காணப்படுகிறார்.

மங்கோலிய நாட்டில் விநாயகர் தலையில் மகுடம் தாங்கி, நெற்றியில் சிந்தூர திலகமும், கையில் முச்சூலமும் உடையவராகக் காணப்படுகிறார்.

''ப்ரியமானவனே! உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.'' (111 - யோவான்: 2)

இதுவே நம்மைக் குறித்து ஆண்டவரின் விருப்பம். நமக்காகவே பிறந்து, நமக்காகவே வாழ்ந்து மரித்த தேவன் இயேசுவின் ஒரே விருப்பமும் ஆண்டவரை நோக்கிய மனிதனின் மாட்சிமை வாழ்வுதான்.

ஆம். உண்மையான விசுவாசத்துடன் தனது தவறுகளை மன்னித்து அருளும்படி இறைவனிடம் வேண்ட, ஆண்டவரும் நமது தவறுகளை மன்னித்து ஆசிர்வதித்து வாழ்வு தருவார். ஆதி-32 ஆம் அதிகாரம். யாக்கோபு என்பவனைப் பற்றிக் கூறுகிறது. அவன், ''ஆண்டவரே! நீர் என்னை ஆசிர்வதித்தாலொழிய உம்மைப் போகவிட மாட்டேன்'' எனக் கூறி அவரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். தேவனும் அவன் உண்மை விசுவாசத்தைக் கண்டு அவனிடம், ''நீ தேவனோடும், மனிதனோடும் போராடி மேற்கொண் டாயே...'' எனக் கூறி அவன் பெயரை 'இஸ்ரேல்' என மாற்றி அவனை ஆசிர்வதித்து வாழ்வளித்தார்.

நாமும் நமது தவறுகளுக்காக வருந்தி உண்மை யோடு ஜெபிக்கும்போது தேவனின் மகிமையான ஆசிர்வாதம் கிடைக்கும்.

மகாபலிபுரத்தில் கலை வேலைப்பாடான நர்த்தன விநாயகர் சிலை உள்ளது. இது கிரானைடு கல்லால் ஆனது. இச்சிலை பார்க்கப் பார்க்க பரவச மூட்டு கிறது. இதன் உயரம் 9 அடி.

சிவகாசி, பத்ரகாளியம்மன் கோயிலில் ஐந்து முகங்களுடன் 'பஞ்சமுக விநாயகர்' என்ற பெயரில் காட்சியளிக்கிறார்.

நாகப்பட்டினம் நீலாயதாட்சி கோயிலில் விநாயகருக்கு ஐந்துதலை பாம்பு குடை பிடிக்கிறது. இவரை 'நாகாபரண பிள்ளையார்' என்ற பெயரில் அழைக்கிறார்கள்.

வண்டு வடிவு எடுத்து பிருங்கி முனிவர் சிவனை வழிபட்டதால் சிவலிங்கத்தில் வண்டு துளைத்த அடையாளம் காணப்படுகிறது. இந்த அற்புதக் காட்சியை நாம் காண திருநல்லூருக்குச் செல்ல வேண்டும்.

சிவலிங்கத்தின் தலை உச்சியில் நண்டு வளை உள்ளது. நீடூரில் ஒரு நண்டு சிவனை வணங்கியதால் இந்த அரியக் காட்சி ஏற்பட்டுள்ளதாம்.

ஒருநாள் கங்கையானவள் சிவபெருமானிடம், "சுவாமி, எப்படி எப்படி எல்லாமோ வாழ்ந்து எத்தனையோ பாவங்களைச் செய்கின்றனர். என்னிடம் வந்து நீராடுவதினால் அவர்கள் செய்த பாவங்களை எல்லாம் நானே ஏற்றுவிடுகிறேன். இப்படி ஒவ்வொருவரும் விட்டுச் செல்லும் பாவங்களை நானே எவ்வளவு காலம் சுமந்து

கொண்டு இருக்க முடியும்...? நான் என்றுதான் நற்கதி அடைவது...?'' என்று கேட்டாள்.

அதற்கு சிவபெருமான், ''கங்கையே! நீ நற்கதி அடையவும் வழியுள்ளது. உன்னிடம் வந்து நீராடும் மக்களை பாவங்களிலிருந்து விடுத்து நீ புனிதப்படுத்திக் கொண்டே இரு. மகான்கள் உன்னிடம் வந்து நீராடி உன்னைப் பாவங்களிலிருந்து விடுத்து புனிதப் படுத்துவார்கள்...'' என்று கூறினார்.

திருச்சூரில் வடக்கு நாதர்சுவாமி கோயிலில் சிவன் நெய் மலையாக இருந்து அருளாட்சி செய்கிறார்.

1008 லிங்கங்கள் ஒரே லிங்கத்தில் இருப்பதை காஞ்சி ஏகாம்பரர் கோயிலிலும், தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலிலும் கண்டு மகிழலாம்.

திருப்பாலைவனம் திருத்தலத்திலுள்ள சுவாமி ஸ்ரீபாலீசர் மீது கோடாரியால் ஏற்பட்ட வடுவைக் காணலாம். இக்கோயில் பொன்னேரிக்கு அருகில் உள்ளது.

சிவன் எட்டுக் கைகளுடன் சிற்பமாக காட்சி தருகிறார். வேறு எங்கும் இல்லாத இத்திருக்காட்சி, காஞ்சியிலுள்ள கைலாசநாதர் ஆலயத்தில்தான்.

'குஸ்மேசம்' என்னும் ஊரில் உள்ள சிவலிங்கம் குங்குமத்தால் ஆனது. இவ்வூர் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ளது.

தஞ்சை மாவட்டம், அய்யம்பேட்டையில் சுவாமி யின் பெயர் செட்டியப்பர். அம்பாளின் பெயர் படியளந்த நாயகி. இங்கு உற்சவமூர்த்தி கையில் தராசு பிடித்துக் கொண்டும், அம்பாள் எடைக்கல்லை பிடித்துக் கொண்டும் அதிசயக் கோலத்தில் காட்சி தருகிறார்.

இஸ்லாமியர்கள் தங்களின் புனித இறைத் தூதராக கருதுவது நபிகள் நாயகம் அவர்களைத்தான். இந்த இஸ்லாமிய பெருமகனார் பிறந்த ஆன்மிக நாள்தான் உலகம் முழுவதும் 'மிலாது' என்றழைக்கப்படுகிறது.

ரபியுல் அவ்வல் மாதத்தில் பனிரெண்டாம் நாள் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தார்கள் என்று கூறப் படுகிறது. எனினும் இந்நாள் உத்தேசமாகத்தான் கணிக்கப் பட்டுள்ளது என்று நபிகள் நாயகத்தின் தோழர்களால் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறைகளைப் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தில் எவருடைய பிறந்த நாளும், இறந்த நாளும் புனிதமானதாகவோ, கொண்டாடக் கூடியதாகவோ கருதப்படுவதில்லை. நபிகளே தனது பிறந்த நாளை கொண்டாட அனுமதிக்கவில்லை.

நபிகள் பிறக்கும்போது சாதாரணமாக பிறந்தவர் தான் நாற்பதாண்டு தனது புனித அற வாழ்க்கையின் அடிப்படையில் நாற்பதாவது வயதினில் நபியாக ஆனவர். நபிகள் ஆவதற்கு முன்பு பொய் பேசுதல், அபகரித்தல், ஏமாற்றுதல் போன்ற எந்த செயலிலும் துளிகூட நம்பிக்கையில்லாத ஆன்மாவாக நபிகள் வாழ்ந்திருந்தமை யால்தான் நபிகளின் இருபத்தைந்தாவது வயதில் அவர் மீது நம்பிக்கை கொண்டு கதீஜா அம்மையார் அவரை மணந்து கொண்டார்.

நபிகள் நாயகத்தைவிட பதினைந்து வயது மூத்தவள் கதீஜா அம்மையார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இஸ்லாமியர்ககள் பக்ரீத், ரமலான் இரண்டு நாட்களை மட்டுமே கோலாகலமாக கொண்டாட வேண்டும் என்று கூறியுள்ளார் நபிகள். நபிகளின் தீவிர முயற்சியின் காரணமாகத்தான் இஸ்லாமியர்களின் ஆண்டு கணக்கு கணிக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டது.

நபிகளின் பிறந்த நாளிலிருந்து இஸ்லாமிய ஆண்டினை உருவாக்கலாம் என்று நபி தோழர்கள் கூறியபோது, நபிகள் இதனை மறுத்துவிட்டு, தியாகத்தின் ஞாபகார்த்தமாகத்தான் இஸ்லாமிய ஆண்டு உருவாக வேண்டும் என்று கூறி ஹிஜ்ரி ஆண்டை உருவாக்கி னார்கள்.



திருவாரூருக்கு அருகிலுள்ள திருநாட்டியத்தான்குடி என்ற ஊரில் 'கைகாட்டி விநாயகராக' நிற்கிறார்.

மதுரையிலுள்ள விளக்குத்தூண் அருகே கீழமாசி வீதியில் விநாயகர் கோயில் உள்ளது. முகலாயர் படையெடுப்பால் இக்கோயில் சேதமுற்றது. அப்போது முகம், கை, கால்களை இழந்திருக்கிறார். அதே நிலையில் இன்றும் விநாயகர் இருப்பதால், மொட்டை விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.

போர்னியா நாட்டில் விநாயகர் சடாமுடியுடனும், தும்பிக்கை வளையாது நேராகவும், நெற்றியில் பிறை வடிவுடனும் காணப்படுகிறார். இவரைச் சுற்றிலும் வேள்வித்தீ எரிவது போல் செய்யப்பட்ட படங்களும், சிலைகளும் இருக்கின்றன. இங்கே விநாயகர் வழிபாடு சிறப்புடையது.

காரைக்காலைச் சேர்ந்த தாமாணங்குடி கிராமத்தில் உள்ள விநாயகர் கோயிலில் பெரிதும் சிறிதுமாக இரு விநாயகர் திரு உருவங்கள் உள்ளன. ஒன்று பிரஞ்சு விநாயகர், ஒன்று இங்கிலீஷ் விநாயகர்.

ஒருநாள் பாண்டவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது, வறியவன் ஒருவன் வந்து தருமபுத்திரரிடம், ''ஐயா! வறுமையில் வாடுகிறேன். ஏதாவது இந்த ஏழைக்கு உதவி செய்யுங்கள்'' என்றான்.

உடனே தருமர் இடது கையால் தன் அருகில் இருந்த வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து தானமாகக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு வறியவன் சென்ற பிறகு, பீமன் கேட்டான்:

''அண்ணா! இடது கையால் தருமம் செய்வது பாபமாயிற்றே, அதற்கு தர்மபலனும் இல்லையே! எல்லா சாஸ்திரங்களையும் அறிந்த தாங்கள் இப்படிச் செய்யலாமா?'' எனக் கேட்டார்.

''தம்பி! வறியவன் நிலையறிந்து மனமிரங்கி வெள்ளிக் கிண்ணத்தைக் கொடுக்கும் எண்ணம் தோன்றியது. நான் சாப்பிட்டுவிட்டு கை கழுவி வந்தபின் தரலாம் என்றால், இந்தப் பொல்லாத மனது எப்படி எப்படி மாறிவிடுமோ...? ஒருவேளை வேறு ஏதாவது சாதாரணப் பொருளைக் கொடுத்தால் போதாதோ...? வெள்ளிக் கிண்ணம் எதற்கு என்று தோன்றலாம். எனவே நல்லதைச் செய்ய நினைக்கும்போது அந்த நொடியிலேயே செய்துவிடுவது நல்லது. அதனால் நமக்கு ஏற்படும் தீமைகளைவிட, பிறருக்கு ஏற்படும் நன்மையே முக்கியம்...'' என்றார், தருமர்.

சிவபெருமான் நடராஜராக பாம்பின்மீது இருந்து நடனமாடும் அற்புதக் காட்சியை நாம் காண, திருவாசி செல்ல வேண்டும். இவ்வூர் நாமக்கல் அருகே உள்ளது.

திருவக்கரை வக்கிர காளியம்மன் கோயிலிலுள்ள சிவன் மூன்று முகத்துடன் காட்சி தருகிறார்.

குடவாசல் அருகே உள்ள ஊர் நாலூர் திருமயானம். இங்குள்ள லிங்கத்தில் மேற்பகுதி பலாப்பழம் போன்று முள்ளு முள்ளாக உள்ளது.

**வ**ட்டி வாங்குவது, பெட்டியை நிரப்புவது மனதிற்கு வேண்டுமானால் மகிழ்ச்சியைத் தரலாம்; உலகிற்கு வேண்டுமானால் உயர்வைத் தரலாம்.

ஆனால், ஆன்மாவிற்கு அமைதி தருமா? வாழ்க்கை அர்த்தப்படுமா...? அழகுபடுமா...? ஒருபோதும் நடக்காது. வேண்டுமானால் இந்தச் சம்பவத்தைப் பாருங்களேன்...

இது பலநூறு ஆண்டுகளுக்கு முன் அரபு நாட்டில் நடந்த நிகழ்ச்சி. உண்மை நிகழ்ச்சிதான்.

ஒரு தம்பதியினருக்கு நீண்ட நெடும் காலமாக குழந்தைப்பேறு இல்லாது இருந்தார்கள்.

பங்களா இருந்தது. பணம் இருந்தது. எடுபிடிக்கு ஆட்கள் இருந்தார்கள். அவர்களும் வாழ்ந்தார்கள்.

இருந்தாலும் இல்லத்தில் துள்ளி விளையாட - அள்ளி அணைத்து அன்பு முத்தமிட குழந்தைச் செல்வம் இல்லையே! அதனால் குழந்தை ஏக்கத்தால் தினம் தினம் வருந்தினார்கள்.

நம் குறைதீர ஒரே வழி இறை வழிபாடுதான் என்று நினைத்தார்கள். அதனால் - பள்ளிவாசலுக்கு (மசூதி) சென்ற அவளது கணவர் தொழுகையின்போது இறைவனிடம் மனமுருகி 'தனக்கு குழந்தைப் பேற்றினை தா அல்லாஹ். அப்படி உம்முடைய அருள் கொடையால்

குழந்தை பிறந்தால், நானும், என் மனைவியும் அந்தக் குழந்தையின் மலத்தைச் சாப்பிடுகிறோம்' என்று விநோதமாக வேண்டிக் கொண்டார்.

காலம் கனிகிறது...

அவர்களுக்கு ஓர் அழகான ஆண் குழந்தையும் பிறந்தது. அவர்கள் குடும்பமே மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. குழந்தையும் வளர்ந்து பெரியவனாகிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் திடீரென்று மகனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. பெற்றோர்கள் தவியாய்த் தவித்துப் போனார்கள்.

மருத்துவரை அழைத்து வந்து காட்டினார்கள். அவரும் அந்த இளைஞனை சோதித்து மருந்து கொடுத்தார். ஆனால் நோய் தீர்ந்த பாடில்லை. மேலும் மேலும் நோய் கூடிக் கொண்டே போனது. அதைக் கண்டு பெற்றோர்கள் அழுது புலம்பினார்கள். ஆற்றாது கண்ணீர் சொரிந்தார்கள்.

பிள்ளையின் இந்நிலைக்குக் காரணம் என்ன? என்று பெற்றோர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்...

அப்போதுதான் அவர்களுக்கு திடீரென்று பள்ளி வாசலில் தொழுகையின்போது வேண்டிக் கொண்டது நினைவுக்கு வந்தது... 'உம்முடைய அருள் கொடையால் குழந்தை பிறந்தால் நானும் என் மனைவியும் அந்தக் குழந்தையின் மலத்தைச் சாப்பிடுகிறோம்...'

தாங்கள் வேண்டிக் கொண்டது நினைவுக்கு வர... மீண்டும் அழத் தொடங்கினார்கள்.

அதுகண்டு அங்கு வந்த உறவினர்கள், அவர்களைச் சமாதானம் செய்து, ‘பக்கத்து ஊரில் வாழ்ந்து வரும் முகம்மது (நபிகள் நாயகம்) அவர்களைச் சென்று பார்த்தால், உங்களுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். மகனும் குணமடைவான்’ என்று கூறினார்கள்.

அவர்களும் உடனே நாயகத்திடம் சென்று, தங்கள் குழந்தைப்பேறு இல்லாது இருந்ததையும், இறைவனிடம் வேண்டிக் கொண்டதையும், குழந்தை பிறந்ததையும், பரிகாரம் செய்ய மறந்ததையும் கூறி நின்றார்கள்.

எல்லாவற்றையும் நாயகம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

“இப்போது எங்கள் மகன் வாலிபனாக இருக்கிறான். இந்த நிலையில் எப்படி நாங்கள் அவனுடைய மலத்தைச் சாப்பிட முடியும்...?” என்று கேட்டு, கண்ணீர் விட்டு அழுது நின்றார்கள்.

அவர்கள் சொல்வதைக் கேட்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்த நாயகம் அவர்கள்...

“உங்கள் மகன் நலமடைவான். நீங்களும் மனம் மகிழ்வீர்கள்... நான் சொல்வதைப் போல செய்யுங்கள்” என்று சொல்லிக் கூறத் தொடங்கினார். “உங்கள் பகுதியில் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் யாராவது இருந்தால், ஒரு சட்டியில் சோற்றைப் போட்டு எடுத்துக் கொண்டு போய் அவர்கள் வீட்டின் முன்பு விழும் நிழலில் நின்று அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டால், அந்தச் சாப்பாடு, மலத்தைச் சாப்பிடுவதற்குச் சமம்” என்று பரிகாரம் சொன்னார்கள்.

அவர்களும் அப்படியே செய்தார்கள். மகன் உடல் நலம் பெற்றான். பெற்றோர் மகிழ்ந்தனர்.

வட்டிக்குப் பணம் விட்டு வாழ்கின்றவர்கள், மலத்தை உண்பதற்குச் சமம் - பாவச் செயல் என்பதை இதன்வழியே நபிகளார் உணர்த்தினார்.

தட்சிணாமூர்த்தியை வீணை வாசிக்கும் நிலையில் லால்குடியிலுள்ள சப்தரிஷீஸ்வரர் கோயிலுக்குச் சென்றால் காணலாம்.

பைரவர் தன்னுடைய தண்டங்களை எல்லாம் வைத்து விட்டு யோக பைரவராகக் காட்சி தரும் இடம், ஸ்ரீவாஞ்சியத்தில்தான்.

ஆறு கரங்களுடன் பைரவர் வளைந்து நிற்கும் அற்புத நிலையை திருக்கண்டேசுவரர் கோயிலில் காணலாம்.

நந்திதேவர் மனித வடிவில் காட்சிதரும் திருத்தலம் அம்பர்மாகானர் என்ற சிவன் கோயிலில்தான்.

அம்மன் புலியின்மேல் அமர்ந்து வரும் காட்சியை, கொள்ளிடத்தில் காணலாம்.

கும்பகோணத்திற்கு அருகேயுள்ள கொடப்பையூர் என்ற இடத்தில், அம்மன் பந்து விளையாடுவது போல ஒரு கால் முன்னும், மற்றொரு கால் பின்னும் உள்ளது. இங்கு இந்த அம்மனின் பெயர் ‘பந்தாடும் நாயகி’ என்பதாகும்.

குழந்தையாகிய முருகனை இடுப்பில் ஏந்திய அம்மனை, திருக்கடவூர் அமிர்தகடேசுவரர் கோயிலுக்குச் சென்றால் காணலாம்.

அன்னை அகிலாண்டேஸ்வரி ஒரு காதில் இரண்டு கம்மல்கள் அணிந்து உள்ளாள். இந்த அரிய காட்சியை திருவானைக்கோயிலில் காணலாம்.

எங்குமே காளியின் வடிவம் உக்கிரமாகவே இருக்கும். ஆனால், தூத்துக்குடி அருகாமையில் உள்ள வல்ல நாட்டில் அன்னை காளி, சிரித்த முகத்துடன் காட்சி தருகிறார்.

பழனி தண்டாயுதபாணியை தோற்றுவித்தவர் போகர் என்ற சித்தர். போகர் ரசவாதத்தில் நிறைய ஆராய்ச்சிகள் செய்து நவபாஷாணங்களைச் சேர்த்து ஒரு சர்வரோக சஞ்சீவியை கண்டுபிடித்தார். அதை சமூகம் முழுவதற்கும் பயன்பட வேண்டும் என எண்ணினார். அதற்கு ஒரு வழியையும் கண்டுபிடித்தார்.

அதுதான் நவபாஷாணத்தால் ஆன தண்டாயுத பாணி விக்கிரகம், பஞ்சாமிர்தங்களை அந்த விக்கிரகத்தின் மீது சொறிந்து அதை எடுத்து பிரசாதமாகக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

இப்படியாகச் சிலையுடன் சேர்ந்த அந்தப் பிரசாதத்தை உண்டவர்களின் உடல் விஷமுறிவு பெற்று, மக்களின் நோய் நொடி நீங்கி, உடல் பொலிவு பெற்றது.

போகருக்குப்பின் அவரின் சீடர் புலிப்பாணியும், அவருக்குப்பின் அவர் வழித்தோன்றல்களும் அத்திரு மேனிக்கு அபிஷேகம் செய்து, அதை மக்களுக்கு வழங்கி வந்தார்கள். பிறகு திருமலை நாயக்கரின் தாளவாயான ராமப்பய்யன் காலத்தில் அந்தணர்கள் அர்ச்சனை பொறுப்பேற்றுக் கொள்ள புலிப்பாணி வழிவந்தவர்கள் போகர் சன்னிதியில் பூஜை செய்கின்றனர். போகர் சன்னிதியும் பழனி மலைமீதுதான் உள்ளது.

முருகன் சங்கு சக்கரத்தோடு காட்சியளிக்கிறார். இந்த அரிய நிலை கும்பகோணத்திற்கு அருகே உள்ள அழகாபுத்தூர் சென்று காணலாம்.

முருகன் கையில் மாம்பழத்துடன் இருக்கும் அருமையான காட்சியை திருநள்ளாறு தர்ப்பாரண் யேச்வரர் கோயிலில் கண்டு மகிழலாம்.

வில், அம்பு கொண்டு வேட்டைக்குச் செல்வது போல், முருகன் இருக்கும் திருத்தலம், திருவையாறு.

கனககிரியில் உள்ள கோயிலில், முருகன் கிளியை ஏந்திய நிலையில் இருக்கிறார்.

அறையணி நல்லூர், கழுகுமலை, கோடியக்கரை, அழகர்கோயில் இந்த இடங்களில் எல்லாம் முருகன் ஒரு முகத்துடனும், ஆறு கரங்களுடனும் எழுந்தருளி காட்சி தருகிறார்.

ஆவூர் திருத்தலத்தில் தாமரைப்பூவை கையிலேந்திய முருகனைக் காணலாம்.

கர்நாடகாவில் உள்ளது நஞ்சன்கூடு என்ற ஊர். இவ்வூரிலுள்ள நஞ்சுண்டேஸ்வரர் தலத்தில், முருகன் தலைக்கு மேலே ஐந்து தலை நாகம் குடைபிடித்த நிலையில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

வியாழ சோமநாதர் ஆலயம் கும்பகோணத்தில் இருக்கிறது. இவ்வாலயத்தில் உள்ள முருகன் காலில் பாதரட்சையுடன் இருந்து காட்சி தருகிறார்.

பனைமரத்தில் செய்யப்பட்ட முருகன் எங்கே இருக்கிறார் தெரியுமா...? திருப்போரில்தான்.

குசேல முனிவர் வறுமையின் பள்ளத்தில் கிடந்த போதும், சர்வசதா காலமும் கண்ணபிரானையே நினைத்து, துதித்துக் கொண்டிருந்தார்.

மனைவியின் வேண்டுகோளின்படியே கண்ணனைக் காணச் சென்றார்.

அவர் வாழும் அவந்திக்கும் துவாரகைக்கும் நெடுந்தூரம்; குடையும், காலணியும் அவருக்கேது? கடும்வெயில். சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். குசேலர் அந்த வெயிலைக் கண்டும் தளராது, உடல் வியர்வையில் நனைய நடந்து கொண்டிருந்தார்.

அவர் சென்ற பாதையின் இருபுறமும் அடர்ந்த மரங்கள் நின்று நிழல் தந்து கொண்டிருந்தன. அவர் அந்த நிழலில் ஒதுங்கி நடந்தால், வெயிலின் கொடுமை இல்லாது நடக்கலாம்.

ஆனால் அவர் அப்படி நடக்கவில்லை. அவர், நடுசாலையில் வெயிலிலேயே நடந்தார். கால் சுடுகின்றது. தலை சுடுகின்றது. இரு கரங்களையும் விரித்துத் தலைக்குமேல் மறைத்துக் கொண்டு, ''கண்ணா! கண்ணா! தாங்க முடியாத வெப்பம் காய்கிறதே! நான் என் செய்வேன்...? இன்னும் காதம் இருக்கின்றதோ?'' என்று கூறிக் கொண்டே நடந்தார்.

அவர் ஏன் நிழலில் ஒதுங்கி நடக்கவில்லை? காரணம் இதுதான்...

'ஈக்கள், எறும்புகள், புழுக்கள் முதலிய சிற்றுயிர்கள் கொடிய வெயிலைத் தாங்க மாட்டாது - நிழலில் ஒதுங்கியிருக்குமே? நாம் நிழலில் நடந்தால் அச்சிற்றுயிர் கள் இறந்துவிடும்' என்று கருதினார். கருணை காரணமாகவே, நிழலில் ஒதுங்காமல் வெயிலில் நடந்து துன்புற்றார். இத்தகைய கருணை அவர்பால் இருந்த தனால், கண்ணபிரானுடைய கருணை அவர்பால் சுரந்தது.

ஆதிசேஷன் மீதுதானே பெருமாள் எப்போதும் சயனம் செய்வார்...? ஆனால், மாமல்லபுரத்திலுள்ள சயனம் பெருமாள் கோயிலில், தரையில் ஒரு கரத்தை தலைக்கு வைத்துக்கொண்டு சாய்வாக நீட்டி சயனம் செய்து கொண்டிருக்கிறார், பெருமாள்.

தஞ்சை மாவட்டம், நாச்சியார்கோயிலிலுள்ள பெருமாளின் வாகனம் கல் கருடன். கல் கருடனே உற்சவத்தும் வருகிறார்.

வேதநாராயணன் கோயிலுள்ள பெருமாள் அனைத்து வேதங்களையும் தலையணையாக வைத்துக் கொண்டு படுத்திருக்கிறார். இது திருச்சி - முசிறி சாலையில் உள்ளது.

வேம்பத்தூரில் வெற்றி பெருமாள் கோயிலில் உள்ள பெருமாள், ஒற்றைக் காலை மடித்து

உட்கார்ந்த நிலையில் அருள் பாலிக்கிறார். இக்காட்சி வேறு எங்கும் காணக்கிடைக்காத அற்புதக் காட்சியாகும்.

நவராத்திரியில் ஒன்பது நாள்களும் உடுப்பி கிருஷ்ணனுக்கு புடவை கட்டி விழா நடத்து கிறார்கள்.

**சி**லரது எண்ணம் வித்தியாசமாக இருக்கும். அப்படி ஒருவர் எடுத்த முடிவுதான் இது...

கற்பின் மேன்மையால் மணலை அன்னமாகச் சமைக்கும் ஆற்றல் கொண்ட பெண்ணையே மனைவி யாக அடைவது என வசிஷ்டர் முடிவு செய்து கொண்டு, கண்ணில் கண்ட கன்னிப் பெண்களையெல்லாம் ''நான் நீண்ட நாட்களாக பட்டினியாக உள்ளேன். மணலைச் சமைத்து உண்பதாய் விரதம் பூண்டு இருக்கிறேன்: உன்னால் முடிந்தால் சமைத்து எனக்கு உணவு அளி'' என்று கேட்டுக் கொண்டார்.

மணலை அமுதாக ஆக்க யாரால் இயலும்...? ஒருவரும் முன்வரவில்லை. இப்படி ஊர் ஊராய் அலைந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒருநாள் தாழ்ந்த குலத்துப் பெண்ணைச் சந்தித்து அதே கேள்வியைக் கேட்டார்.

அப்பெண் மணலைப் பெற்றுச் சென்று, தன் இஷ்ட தெய்வமான சிவபெருமானைப் பிரார்த்தித்து

அந்த மணலை சமைத்தாள். அது சோறாயிற்று. அவருக்குப் படைத்தாள்.

கற்பின் பெருமையில் உயர்ந்த அந்தத் தாழ்ந்த இனத்துப் பெண்ணையே அந்தணரான வசிஷ்டர் மணந்தார். அவள்தான் அருந்ததி.

தன் குணத்திலும், செயலிலும் (குணம் - கர்மா) உயர்ந்தவர்கள்தான் உண்மையில் உயர்ந்த ஜாதி என்று அன்றே உறுதிப்படுத்தியது இந்து மதம்.

சோளிங்கரில் வித்தியாசமான முறையில் ஆஞ்சநேயர் சங்கு சக்கரங்களை கரங்களில் வைத்துக் கொண்டு காட்சியளிக்கிறார்.

காடு அனுமந்தராயன் கோயிலுக்கு மேற்கூரையே கிடையாது. இது தாராபுரத்தில் உள்ளது.

இராமசுவாமி கோயில் கும்பகோணத்தில் இருக்கிறது. இங்கே ஆஞ்சநேயர் வீணைவாசித்த நிலையில் இருக்கிறார்.

புது அக்ரஹாரம் என்ற ஊர், திருவையாறுக்கு அருகில் உள்ளது. இங்கே ஆஞ்சநேயர் இடது கையில் புத்தகத்தையும், வலது கையில் வீணையையும் ஏந்தி நின்று பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

நவக்கிரகங்கள் தங்களுடைய துணைவியருடன் அமர்ந்து காட்சி தருகின்ற நிலையைப் பார்க்க விரும்புகின்றவர்கள்... காரைக்குடி அருகேயுள்ள மானகிரிக்கும், திருச்சி ஸ்ரீரங்கம் சாலையிலுள்ள பனவூருக்கும், கோவை அருகேயுள்ள பெரிய நாயக்கன் பாளையத்திற்கும், நெல்லை ஸ்ரீவைகுண்டம் சாலையிலுள்ள கருங்குளத்திற்கும் சென்று காணலாம்.

நவக்கிரகங்கள் என்றாலே ஒருவருக்கு ஒருவர் முகம் திருப்பியே இருப்பார்கள். ஆனால், நாகையில் அனைவரும் மேற்கு நோக்கி வரிசையாக அமர்ந்திருக்கும் காட்சி அருமையான ஒன்றாகும்.

**வை**ணவ குருமார்களில் கூரத்தாழ்வார் பெரும் பணக்காரர். அவர் தனது குருவாகிய இராமானுஜர் அரங்கன் ஆராதனையில் ஈடுபட்டு, ஸ்ரீரங்கத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டதால் அவரைப் பிரிந்து காஞ்சியில் வாழ்ந்திருப்பது பிடிக்காமல் மிகவும் வருந்தினார். ஒருநாள் எல்லாச் செல்வங்களையும் மக்களுக்கு வாரி வழங்கிவிட்டு, வெறுங்கையுடன் கட்டிய மனைவியை மட்டும் கூட்டிக்கொண்டு ஸ்ரீரங்கம் நோக்கி தன் ஆசானை வணங்கப் புறப்பட்டார்.

இருவரும் காவிரிக் கரையை நெருங்கிக் கொண்டிருந்தனர். தன் தலைவனை அடைவதை மட்டுமே சிந்தனையில் கொண்டு கூரத்தாழ்வார் முன் நடக்க மனைவி பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்.

மாலைப் பொழுது கழிந்து இரவும் வரத் தொடங்கியது. தயங்கித் தயங்கி கணவரை அழைத்து, ''இருட்டிவிட்டதே, இங்கு எங்காவது தங்கி இரவுப் பொழுதைக் கழித்துவிட்டு காலையில் செல்லலாமே...'' என்றார் அந்த அம்மையார்.

''இருட்டாவது, வெளிச்சமாவது, பேசாமல் வா...'' என்று அதட்டி விட்டு தன் இலட்சியப் பயணத்தில் கண்ணாக நடந்தார்.

வழியில் கண்ட ஊர் மண்டபத்தில் எல்லாம் தங்கிவிட்டுப் போகலாம் என்று மனைவி சொல்லிக் கொண்டே வந்தார். ஆனால் கூரத்தாழ்வாரோ அவர் மனைவி சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் நடந்து கொண்டிருந்தார்.

இரவு நேரம் ஆக ஆக அம்மையாரின் பயம் அதிகம் கூடிக் கொண்டே இருந்தது.

ஆழ்வார் பொறுமையை இழந்து மனைவியிடம், ''ஏன் இப்படி பயப்படுகிறாய்? ஸ்ரீரங்கநாதரையும், இராமானுஜரையும் மட்டும் துணை கொண்டு செல்லும் நம்மை எந்த சக்தியும், எதுவும் செய்துவிட முடியாது. ஏன், எதற்காக இப்படி நடுங்குகிறாய்?'' என அதட்டிக் கொண்டே அம்மையாரை நெருங்கியபோது, அம்மையார் ஏதோ ஒன்றை மறைப்பது கூரத்தாழ்வாருக்குப் புரிந்தது. அவர் மனைவியின் சேலைத் தலைப்பைப் பிடித்து இழுத்தார். மடியில் ஒரு தங்கக் கிண்ணம் இருப்பது தெரிந்தது.

"இது எப்படி உன்னிடம்? ஏன் மறைத்து வைத்திருந் தாய்...?" என்று மனைவியை அதட்டிக் கோபத்தோடு கேட்டார்.

அந்த அம்மையார் கண் கலங்கியபடி, "சொத்துக்கள் முழுவதையும் இழந்துவிட்டு புதிய இடத்திற்குச் செல்கிறோமே, ஆபத்துக்கு உதவுமே என்று இந்த ஒன்றை மட்டும் கூடவே கொண்டு வந்தேன்" என்றார் குற்ற உணர்வுடன்.

கூரத்தாழ்வார் அக்கிண்ணத்தை மனைவியிட மிருந்து பிடுங்கி காவிரி ஆற்றில் எறிந்துவிட்டார்.

பின் தன் மனைவியை நோக்கி, "கலங்காதே. இனி உனக்கு பயமே இராது. அமைதியாகப் பின் தொடர்ந்து வா... மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்...?" என்றார் அமைதியாக.

வாலாஜா அருகேயுள்ள வன்னிவேட்டில் உள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலில், சனீஸ்வரர் ஒற்றைக் காலில் நிற்பது அற்புதக் காட்சியாகும்.

திருமீயச்சூர் இலலிதாம்பிகை திருக்கோயிலில் நவக்கிரகங்கள் பாம்பு வடிவத்தில் இருக்கிறார்கள்.

காஞ்சி வைகுந்தநாதப் பெருமாள் கோயிலில் மூன்று கருவறைகள் உள்ளன.

காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் சக்கரத் தாழ்வார் 16 கைகளுடன் காட்சி அளிக்கிறார்.

திருவண்ணாமலையில் விநாயகர் சிவப்பு நிறத்தில் காணப்படுகிறார். இவர் அசுரனைக் கொன்று அவனது இரத்தத்தைத்தன் உடல் முழுதும் பூசிக் கொண்டதாக ஐதீகம்.

'அன்பு' என்றால் என்ன என்பதற்கு புனித வேதாகமத்தில் பல விளக்கங்கள் உண்டு. அதில் ஒரு விளக்கம்.

'அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமை இல்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் நம்பும். சகலத்தையும் விசுவாசிக்கும். சகலத்தையும் சகிக்கும்'. (1 கொரிந்தியர் 13 : 4 - 7)

சிவபெருமானின் 64 திருவிளையாடல்களும் மதுரையில்தான் நடந்தேறின.

ஆண்டுக்கு 300 நாள்கள் திருவிழா நடக்கும் ஒரே கோயில் மீனாட்சி அம்மன் கோயில்தான்.

திருவக்கரையில் எழுந்துள்ள வக்கிரகாளி மண்டை ஓட்டினால் செய்யப்பட்ட கிரீடம் அணிந்துள்ளாள். குழந்தை ஒன்று காதில் குண்டலம்போல் தொங்கிக் கொண்டு இருக்கிறது. தம்முடைய ஏழு கைகளிலும் ஏழு ஆயுதங்களை ஏந்தியிருக்கிறாள். வலது காலைத் தூக்கி மடக்கியவாறு பீடத்தில் வைத்து, இடது காலை கீழே தொங்கவிட்டு நிலத்தில் பாதம் பதிக்கும் நிலையில் நிற்கிறாள்.

திருவக்கரையிலுள்ள சனிபகவானின் வாகனம் காகம் வலதுபுறத்திற்குப் பதிலாக இடது புறத் திலுள்ளது.

தஞ்சை மாவட்டம் - திருமீயச்சூரில் எமதர்மனுக்கு கோயில் உள்ளது.

வேலூர் வட்டம், ஜலகாம்பாறை என்ற ஊரில் உள்ள முருகன்கோயில் சிவலிங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பெரிய சிவ லிங்கத்தின் உள்ளே முருகன் வள்ளி தெய்வானை யுடன் அருள்பாலிக்கிறார்.

கம்போடியாவில் 'அங்கோர்வாட்' என்னும் ஊரில் உள்ள விஷ்ணு ஆலயம் தாமரைப்பூ வடிவத்தில்

அமைந்துள்ளது. இது உலகிலேயே பெரிய இந்துக்கோயில் என்கிறார்கள்.

தஞ்சை பெரிய கோயிலின் கோபுரத்தின் நிழல் மட்டுமல்ல, திருக்கோஷ்டியூர் மாதவன் கோயிலின் கோபுர நிழலும் கீழே தரையில் படிவது இல்லை.

காஞ்சி காமாட்சி அம்மன் திருத்தலத்தில் சரஸ்வதி தேவி எட்டுக் கரங்களுடன் காட்சி தருவது புதுமையானது.

'திருமணம் செய்து கொள். நல்ல உணவை உட்கொள். அதே நேரத்தில் ஆன்ம சுகத்திற்காக இறைவனைத் தொழுது அவன் கட்டளைகளின்படி வாழ்க்கை நடத்து' என்பதே இஸ்லாத்தின் அறநெறியாகும்.

'எவன் அல்லாஹ்வின்பால் திரும்பி விசுவாசம் கொண்டு நற்செயல்களும் செய்கிறானோ அத்தகை யவனுடைய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பது மட்டுமல்ல, அதனை நன்மையாகவும் மாற்றி விடுகிறான். அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கிறான்'. (வான் மறை 25-70) இத்தகைய அருள்நெறி வாக்கு களின்படி மனிதன் இறை சிந்தனையோடு வாழ்ந்தால் நலமாக வாழலாம்.

காரைக்குடி அருகிலுள்ள விநாயகர் வலஞ்சுழியாய் இரு கரங்களுடனும், வலக்கையில் மோதிரம் அணிந்து, இடக்கையை இடுப்பில் வைத்த நிலையில் அற்புத நிலையில் காட்சி தருகிறார்.

சுவாமிமலை அருகே உள்ள ஊர், திருவலஞ்சுழி. இங்கே விநாயகர் கடல் நுரையால் செய்யப்பட்ட சிறிய விநாயகர் உருவம் தாங்கியுள்ளார்.

திருவாரூருக்கு அருகே உள்ள மாஞ்சாடி என்ற கிராமத்தில் பாலசுப்பிரமணியரால் உருவாக்கப் பட்ட மஞ்சள்பொடி விநாயகரைக் காணலாம்.

திருவாரூர் - பூங்கோயில் முதல் சுற்றில் ஐந்து தலை நாகம் சுருண்டு படுத்து இருக்க, அந்த சுருளின் நடுவில் விரிந்த தாமரை மலரும், அம்மலரின் மீது கூத்தாடும் விநாயகர் பெருமானும் காட்சி தருகிறார்.

கும்பகோணத்தில் உள்ள ஸ்ரீநாகேஸ்வரர் கோயி லில் ‘ஜீரஹர’ என்ற பெயருடன் கணபதி கையில் குடையுடனும், தும்பிக்கையில் அமிர்த கலசத் துடனும் இருந்து அருள் வழங்குகிறார்.

தஞ்சாவூரில் உள்ள சக்கரபாணி கோயிலில், கணபதி சங்கு சக்கரத்துடன் இருந்து காட்சி தருகிறார்.

மயிலாப்பூரில் நடன கணபதியைக் காணலாம்.

ஸ்ரீரங்கத்திலிருந்து பாகவதக் கூட்டம் ஒன்று திருப்பதிக்கு பாதயாத்திரை புறப்பட்டது.

இடைவழியில் மதுராந்தகம் ஏரிக்கரையில் தங்கி நீராடிப் பெருமாளை வணங்கி அமுது உண்டு களைப்பு நீங்கிச் சென்றது.

பாகவதர்கள் அமுது செய்த இடத்தில் சிதறிக் கிடந்த சேவுப் பிரசாதத்தையும், தேங்கி நின்ற நீரையும் அங்கு அருகில் வசித்த உடும்பு ஒன்று ஆவலுடன் உண்டு மகிழ்ந்தது. பாகவத சேவும் உண்பவருக்கு மறுபிறவி இல்லை.

ஆனால் அந்த உடும்பு மறுபிறவிக்கு ஆளாகி விட்டது. சேஷப் பிரசாதத்தின் பெருமையை அறியாம லேயே அப்போதைய பசியை ஆற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் மட்டுமே அது உண்டது. எனவே, அக்குறைபாட்டின் காரணமாகவே மறு பிறப்பு அற்ற நிலையை அது அடையவில்லை.

ஆனாலும் மனிதப் பிறவியாகப் பிறந்து உயர்வு பெற்றது. ஆமாம். வைணவ சமய ஆச்சார்யரான

ஸ்ரீராமானுஜ முனிவருக்கே முதல் ஆசிரியராக இருந்த யாதவப் பிரகாசரின் ஜீவ ரகசியம்தான் அது.

ஆண்டாளுக்கு தினமும் ஒரு கிளி பொம்மை செய்து வைக்கிறார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூர் திருத்தலத்தில்தான்.

சரஸ்வதி தேவி எங்கு பார்த்தாலும் வீணை யில்லாமல் பார்க்க முடியாது. ஆனால், வேதாரண் யத்தில் உள்ள கோயிலில் சரஸ்வதிதேவி வீணை இல்லாமல் வெறுங்கையுடன் இருப்பதைக் காணலாம்.

சபரி மலையில் உள்ள மஞ்சள் மாதா கோவிலில் தேங்காயை உருட்டி விட்டுப் படைக்கும் தத்துவம் என்ன...? தேங்காயை மனிதர்கள் சிரசாகச் சொல்வதுண்டு. கடவுளிடம் நாம் சரணாகதி அடைகிறோம் என்ற பொருளில்தான் அப்படிச் செய்யப்படுகிறது.

இந்துமதக் குருமார்களில் முதன்மை பெற்றவராகப் போற்றப்படுபவர் ஆதிசங்கரர். அவருக்கும்கூட ஆரம் பத்தில் சிறிது பேய் புத்தி இருந்திருக்கிறது...

ஒரு சமயம் அவர் கங்கையில் நீராடிவிட்டு விஸ்வநாதர் ஆலயத்திற்குப் போய்க் கொண்டு இருந்த

போது, எதிரே குடித்துவிட்டு மாமிசத்தைச் சுமந்து வந்த புலையன் ஒருவன் தற்செயலாக அவரைத் தொட்டு விட்டான்.

''அடே...! என்ன காரியம் செய்தாய்...? என்னை ஏன் திண்டினாய்...?'' என்று கோபமாகக் கேட்டார், ஆதிசங்கரர்.

அவர் கேட்டதும், அவரைப் பார்த்து கலகலவென சிரித்தான் அந்தப் புலையன். பின் சொன்னான்:

''ஐயா, நான் உங்களைத் தொடவும் இல்லை, நீங்கள் என்னால் தீண்டப்படவும் இல்லை. ஆன்மாவை எதுவும் தொட முடியாது. பஞ்சபூதங்களோ, இருபத்து நான்கு தத்துவங்களோ ஆத்மாவைத் தீண்டுவதில்லை'' என்றான்.

ஆதிசங்கரருக்கு அதைக் கேட்டதும், புத்தி தெளிந்து, தடாலென அவனது காலில் விழுந்து வணங்கினார்.

''சூனியத்துக்குள்ளே சுற்றிக் கொண்டிருந்த என்னை பூரணத்துக்கு அழைத்து வந்த புலையனே... நீயே என் குருதேவர்...'' எனக் கும்பிட்டு எழுந்தார்.

உடல் பொய்! ஆத்மாவே மெய்! என்ற ஆதார சுருதியை அறிதலே முக்கியம்.

இன்றும் நம் நாட்டில் கிராமங்களில் ஐயனாரே வழிபாட்டுக்குரியவராக இருந்து வருகிறார். தாமும் தம் பரிவாரங்களுமாக அவர் மக்களைக் காத்து

வருகிறார். இரவு நேரத்தில் குதிரையின் மீது ஏறிக்கொண்டு பரிமேலழகராக உலா வருகிறார்.

இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களில் பல கோயில்களில் சுட்ட மண் குதிரை வடிவி லேயே ஐயனாருக்கு வழிபாடும் விழாவும் நடை பெற்று வருகின்றன.

ஸ்ரீவாஞ்சியம் என்ற ஊரில் எமதர்மராசாவே இறைவனுக்கு இறைவிக்கும் வாகனமாக இருக் கிறார்.

ஈசன் பச்சை நிற மேனியுடையவராக திரு இடைச்சுரம் - ஞானபுரீஸ்வரர் கோயிலிலும் திரு ஈங்கோய்மலை - மரகதாலேஸ்வரர் கோயிலிலும் இருப்பதைக் காணலாம்.

காரைக்குடியிலுள்ள முத்துமாரியம்மன் ஆலயத்தில் பங்குனி மாதம் நடைபெறும் பெருவிழாவில் தக்காளிப் பழச்சாறு அபிஷேகம் நடைபெறுகிறது. வேறு எங்கும் தக்காளி அபிஷேகம் நடக்கிறதா...?

செங்கஞ்சேரி அம்மன் கோயிலில் பௌர்ணமி யன்று மருதாணி இலை அபிஷேகம் நடை

பெறுகிறது. அபிஷேகம் முடிந்ததும் கன்னிப் பெண்களுக்கு அவற்றை பிரசாதமாக வழங்கு கிறார்கள். இந்த அம்மன் குரோம்பேட்டை கணபதிபுரத்தில் உள்ளார்.

ஒருமுறை ஆண்டவன் தன் அழகிய தேவதை களில் ஒருவரைக் கூப்பிட்டு மனிதர்கள் வாழும் உலகிற்குச் சென்று மிகவும் விலை உயர்ந்த விலை மதிக்க முடியாத பொருள் ஒன்றைக் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டார்.

அந்த தேவதையும் உலகிற்கு வந்து பல்வேறு அழகிய பொருட்களைப் பார்த்து, கடைசியில் பலவகைப் பட்ட உயர்ந்த வைரங்களை எடுத்துச் சென்று இறை வனிடம் காண்பித்தது.

ஆனால் இறைவன் அதைக் கண்டு மனநிறைவு கொள்ளவில்லை.

மனம் நொந்துபோன தேவதை இறைவனைத் திருப்திப்படுத்த என்ன செய்வது என்று கலங்கிக் கொண்டிருக்கையில், எங்கிருந்தோ ஒரு மனிதன் இறைவனின் சன்னிதானம் ஒன்றில்தான் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வருந்தி, கண்ணீர் வடித்துக் கொண்டு இருப்பதை அந்தத் தேவதை பார்த்தது.

உடனே, உலகில் விலை மதிக்க முடியாத பொருள் கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியில், அவன் சிந்திய

கண்ணீர் துளிகளை ஒருசிறு கிண்ணத்தில்ஏந்தி வந்து இறைவனிடம் அளித்தது...

அதைக் கண்ட இறைவன் பேரானந்தத்துடன் அந்தக் கண்ணீரைப் பெற்றுக் கொண்டார்.

செங்காவி நிற கணபதியை திருவண்ணாமலையில் கண்டு வணங்கலாம்.

நர்மதை ஆற்றின் கரையில் அமைந்துள்ள பன்னிரு ஜோதித்தலங்களில் ஒன்றான ஓங்காரம் என்னும் கோயிலில் ஐந்து திருமுகங்களை உடைய அழகிய கணபதியைக் கண்டு வணங்கலாம்.

சென்னை - அடையாறிலுள்ள மத்ய கைலாசம் என்ற திருத்தலத்தில் ஒருபாதி கணபதியும், மறுபாதி ஆஞ்சநேயரும் என்ற நிலையில் இணைந்த ஒரு புதுமையான 'ஸ்ரீஆதியந்த பிரபு'வைக் கண்டு மகிழலாம்.

கோவையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் இருக்கும் கணபதி ஆண்பாதி, பெண்பாதி என்ற நிலையில் அமைந்து மக்களுக்கு அருள் பாலிக் கிறார்.

கமலாசுரன் என்னும் அரக்கன் வேதங்களைத் திருடி கடலில் அதனை மறைத்து வைத்தான். அதனை மீட்க விநாயகர் மல்லாளன் என்னும் அந்தணச் சிறுவனாகத் தோன்றினார். கமலாசுரனை அழிக்க விநாயகப் பெருமான் மயிலை வாகனமாகக் கொண்டு அதில் ஏறி கமலாசுர அரக்கனை அழித்தார். இவரை மயூரேச விநாயகர் என்பவர்.

குஜராத் மாநிலம் - அகமதாபாத் அருகே உள்ள கிராமம்தான், சத்ரால். இக்கிராமத்து மக்கள், 'புண்ணாக்கு விநாயகர்' என்ற பெயரில் கோயில் ஒன்றை கட்டியிருக்கிறார்கள். இந்த ஊரில் அதிகமாக பருத்தி விளைகிறது. அவை முழுவதும் அமுல் பண்ணைக்கு அனுப்பப்படுகிறது. அங்கே பருத்தி எண்ணெய், துஷார் வனஸ்பதியும் செய்யப்படுகிறது. இவ்வூரில் கடலையும், பருத்தியும் நன்கு விளைய வேண்டும் என்ற காரணத்தால், இவ்வூர் விவசாயிகள் கடலைப் பிண்ணாக்கை தரையில் ஒரு அடி ஆழத்தில் புதைத்து அதன்மீது விநாயகரை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். தினமும், பூஜையும் நடத்து கிறார்கள்.

ஒரு முனிவரும் அவர் சீடரும் காட்டின் வழியாக வந்து கொண்டிருந்தனர்.

வனத்தில் பொய்கை ஒன்றைக் கண்ட முனிவர் சந்தியாவந்தனம் செய்ய எண்ணி பொய்கையில் குளித்து

முடித்து சந்தியாவந்தனக் கடமைகளைச் செய்யத் தொடங்கினார். சீடனும் குருவைப் பின்பற்றினான்.

அப்பொழுது ஒரு சிங்கத்தின் கர்ஜனை கேட்கவே சீடன் பயந்துபோய் மரத்தில் ஏறிக் கொண்டான்.

குருவோ ஏதுமறியாது பிரார்த்தனையில் ஈடு பட்டார். சிங்கம் அவர் அருகில் வந்து பார்த்துவிட்டு, ஒன்றும் செய்யாது தன் வழியே சென்றது.

பிரார்த்தனை முடிந்ததும் சீடனுடன் முனிவர் ஊரை அடைந்தார்.

அப்போது, ஒரு காளை மாடு தறிகெட்டு ஓடி வருவதைக் கண்டு அஞ்சி விலகினார். ''வனத்தில் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டும், பிரார்த்தனையில் இருந்தீர்கள். நீங்கள் இப்போது காளை மாட்டிற்கு அஞ்சுகிறீர்களே...!'' என்று முனிவரான குருவைப் பார்த்து கேட்டான், சீடன்.

அதைக் கேட்ட முனிவர், ''அப்போது நான் பிரார்த்தனையில் கடவுளின் அருகில் இருந்தேன். இப்பொழுதோ மனிதனுடன் மாயையில் இருக்கின்றேன்'' என்றார்.

பொதுவாக கோயில்களில் விநாயகர் சிலைகள் அமர்ந்த நிலையில்தான் காணப்படுவார். ஆனால், மதுரை திருமங்கலத்திலிருந்து பேரையூர் செல்லும்

வழியில் அமைந்து உள்ள மாத்தங்கரை எனும் ஊரில் அபூர்வமாக நின்ற கோலத்தில் விநாயகர் காட்சி தருகிறார். புளிய மரங்கள் சூழ்ந்த பகுதியில் எழுந்தருளியுள்ள இவ்விநாயகரின் வலக்கரத்தில் கோடாரியுடன் காணப்படுகிறார்.

தஞ்சை மாவட்டம் - பாபநாசத்தில் ஐந்துதலை நாகம் படம் விரித்து குடைபிடித்திருக்க, விநாயகர் வீற்றிருக்கிறார். இவ்வூர் மக்கள் இவரை சர்ப்ப விநாயகர் என்று அழைக்கின்றனர்.

ஆரணியை அடுத்துள்ள பழங்கமூர் குளக்கரையில் 'புற்று' வடிவத்தில் விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

விநாயகர் சதுர்த்தி அன்று சென்னை, தி.நகரில் 25 அடி உயரத்திற்கு இரண்டரை டன் எடையுடன் கூடிய மிகப்பெரிய அருகம்புல் விநாயகரை உருவாக்கி, வழிபாட்டிற்காக அமைத்திருந்தார்கள்.

ஜப்பானில், ருன்ஹவாஸ், குன்ஹலீன் என்ற நகரங்களில் உள்ள விநாயகர் மிகவும் பழமை யானவர். இங்கே யோக நிலையில் விநாயகர் அமர்ந்துள்ளார். இந்நாடு முழுவதுமே சர்வ

சாதாரணமாக இந்த நிலையில் விநாயகர் அமர்ந் திருக்கிறார்.

மங்கோலிய நாட்டில் விநாயகர் நான்கு கைகளுடன் கூடிய கணபதியை சிறப்பாக வணங்கி வருகின் றனர். இங்கு விநாயகருக்கு சந்தனப் பொட்டு இட்டு மகிழ்கின்றனர்.

கம்போடியா நாட்டில் விநாயகரை அறிவின் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். ஒற்றைக் கொம்பை கையில் வைத்து, முக்கண் உடைய வராகவும், ஒரு கையில் கமண்டலம், மறுகையில் திருஓடு, கமுண்டியுடனும் மிக விநோதமாகவே காட்சியளிக்கிறார்.

ஜாவா நாட்டில் விநாயகர் வடிவம் மாறுபட்ட நிலையிலேயே காட்சியளிக்கிறார். இந்நாட்டு மக்கள் இவரை அறிவின் வடிவமாகவே கருதி, ஆற்றங் கரையில் வைத்து வழிபாடு செய்கிறார்கள். பெரிய வயிற்றுடனும், மொட்டைத் தலையுடனும், மண்டை ஓடும், எலும்பு அணிகல மாலைகளும் அணிந்து அற்புதமாக காட்சியளிக்கிறார்.

திபேத், பௌத்த மதம் தழுவிய நாடு. இருந்தும் இங்கே விநாயகர் வழிபாடு சிறந்து விளங்குகிறது.

தீய ஆற்றல்களுக்கும், பூத கணங்களுக்கும் தலைவராக விளங்குகிறார்.

## வாரியாரின் பத்து கட்டளைகள்

- எப்போதும், எந்த நிலையிலும், எந்த இடத்திலும் பிறர் மனம் நோகப் பேசக்கூடாது.

- ஒருவரிடம் நேரில் பேசும்போது, 'நீங்கள்', 'உங்கள்' என்று பன்மையாகப் பேசிவிட்டு, அவர் இல்லாத போது, 'இவன்', 'அவன்' என்று ஒருமையில் பேசுவது மனிதனுடைய உயர்வைக் கெடுத்து விடும்.

- பிறருடைய குற்றங்களை ஆராய்தல் கூடாது; நினைக்கவும் கூடாது, பேசவும் கூடாது. இந்தப் பழக்கம் இவர்களுடைய வாழ்வைப் பாழ்படுத்தி விடும். பிறருடைய நற்குணநலன்களை மட்டும் சமயம் வரும்போதெல்லாம் கூறுதல் வேண்டும். இது மனித வாழ்வை உயர்த்தும்.

- கடவுள் சந்நிதியில் நாம் வாழ்கின்றோம். கடவுள் எங்கும் உரைபவர். நாம் நினைப்பதை, பேசுவதை, செய்வதை அவர் அறிந்து கொண்டேயிருக்கிறார். ஆதலால், தீய சிந்தனை, தீய சொற்கள், தீய நடைகள் இவைகளை அறவே விலக்க வேண்டும். நல்ல சிந்தனை, நல்ல இனிய உண்மையுரைகள், நல்ல நடைகளை மேற்கொள்ள வேண்டும்.

- 'நமக்கு எல்லாம் தெரிந்துள்ளது; மற்றவர்க்கு என்ன தெரியும்?' என்று நினைத்துக் கொண்டு தருக் குற்றிருக்கக் கூடாது. கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு. எல்லாம் தெரிந்தவர்களும் இல்லை, ஏதும் தெரியாதவர்களும் உலகில் இல்லை. ஆதலால் அடக்கமாகவும், பணிவாகவும் இருத்தல் வேண்டும்.

- கடன்பட்டு ஆடம்பரமாகச் செலவழிக்கக் கூடாது. கடன்படுவது மிகவும் துன்பத்தைத் தரும். கூடுமானவரை சிக்கனமாகவும், எளிமையாகவும் வாழ்தல் வேண்டும். கடன்பட்டு பாலன்னம் உண்பதைக் காட்டிலும், கடன்படாமல் உப்பில்லாக் கஞ்சியுண்பது நல்லது.

- யாரிடத்திலும் கடுஞ்சொல்லாக வெடுவெடு என்று பேசக்கூடாது. இனிமையாகவும், குளிர்ச்சியாகவும் பேச வேண்டும். கராராகவும் ஒருவரிடமும் பழகக் கூடாது.

- தாய்மொழியிலும், தாய்நாட்டிலும், தன் சமயத் திலும் பற்றிருக்க வேண்டும். ஆனால், பிற மொழிகளிடத்திலும், பிற சமயங்களிலும் வெறுப்பு உணர்ச்சி இருக்கக் கூடாது. மொழி வெறியும், இனவெறியும் மனிதனுடைய முன்னேற்றத்தைத் தடுத்துவிடும்.

- நாம் பிறவாத இடமோ, பேசாத மொழியோ, நாம் தோன்றாத குலமோ கிடையாது. எண்ணில் கோடி பிறவிகளை எடுத்துள்ளோம். ஆதலால், நம் நாடு;

எல்லோரும் நம் சகோதரர்கள் என்று கருதி சாந்தமாகவும் அன்பாகவும் வாழ வேண்டும்.

- மரணம் எப்போது வரும்? எந்த இடத்தில் வரும்? எவராலும் அறிந்து கொள்ள இயலாது. அது எந்த விநாடியிலும் வரும். ஆதலால், நாம் நல்ல அறங்களைச் செய்து, தவம், தியாகம் புரிந்து செல்கதிக்கு நலந்தேட வேண்டும்.

●